## திருவள்ளூர் மாவட்டத்தில்

# விலையில்லா முகக்கவசம் வழங்கும் பணி: அமைச்சர்கள் பென்ஜமின், பாண்டியராஜன் துவக்கினர்

திருவள்ளூர், ஆக. 7–

திருவள்ளூர் மாவட்டத்தில் விலையில்லா முகக்கவசம் வழங்கும் பணியை அமைச்சர்கள் பா.பென்ஜமின், க. பாண்டியராஜன், கலெக்டர் மகேஸ்வரி ரவிக்குமார் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, வைஷ்ணவி நகர் பகுதியில் செயல்படும் நியாய விலைக்கடையில், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பாக, கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கையாக நியாயவிலைக்கடைகளில் பொதுமக்களுக்கு விலையில்லா முகக்கவசம் வழங்கும் பணியை ஊரக தொழில்துறை அமைச்சர் பா.பென்ஜமின், தமிழ் ஆட்சிமொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் க.பாண்டியராஜன் ஆகியோர் கலெக்டர் மகேஸ்வரி ரவிக்குமார் முன்னிலையில் துவக்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பா.பென்ஜமின், க.பாண்டியராஜன் கூறியதாவது:

முதலமைச்சரின் ஆணை மற்றும் அறிவுறுத்தல்களுக்கிணங்க, திருவள்ளூர்மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் துரிதமாக நடைபெற்று வருகிறது. முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி 27.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா முகக்கவசம் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 2,06,572 குடும்பங்களைச் சேர்ந்த 6,73,168 நபர்களுக்கு நியாய விலைக்கடைகள் வாயிலாக முகக்கவசங்கள் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் ஒரு நபருக்கு 2 முகக்கவசங்கள் வீதம் 6,73,168 நபர்களுக்கு 13,46,336 எண்ணிக்கையிலான விலையில்லா முகக்கவசங்கள் வழங்கப்படவுள்ளது.



ஆவடி மாநகராட்சியில் 90,495 குடும்ப அட்டைகளை பெற்ற 3,16,281 நபர்களுக்கு 6,33,000 விலையில்லா முகக்கவசங்களும், 4 நகராட்சிகளில் 57,149 குடும்ப அட்டைகளை பெற்ற 1,84,314 நபர்களுக்கு 3,68,628 விலையில்லா முகக்கவசங்களும், 10 பேரூராட்சிகளில் 58,928 குடும்ப அட்டைகளை பெற்ற 1,72,573 நபர்களுக்கு 3,45,146 விலையில்லா முகக்கவசங்கள் ஆக மொத்தம் மாவட்டத்தில் 2,06,572 குடும்ப அட்டைதாரர்களுக்கு 6,73,168 நபர்களுக்கு 13,46,336 விலையில்லா முகக்கவசங்கள் வழங்கப்படவுள்ளது. மாவட்டத்தில் மொத்த உள்ள மாநகராட்சி 14 நியாய விலை கடைகளும், 4 நகராட்சிகளில் 61 நியாய விலை கடைகளும், மற்றும் 10 பேரூராட்சிகளில் 54 நியாய விலை கடைகளும் ஆக மொத்தம் 129 நியாய விலை கடைகளில் முதல் கட்டமாக விலையில்லா முகக்கவசங்கள் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சிகளில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் வி.அலெக்சாண்டர், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் முருகாநந்தம், மாவட்ட வழங்கல் அலுவலர் இலக்கியா, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் பிரீத்தி பார்கவி, ஆவடி ஆவின் பால் கூட்டுறவி சங்கத் தலைவர் தீனதயாளன், ஆவடி வட்டாட்சியர் சங்கிலி ரதி மற்றும் பல்வேறு துறை உயர் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



## நாகர்கோவில், தக்கலை அரசு மருத்துவமனைகளில்

# கொரோனா நோயாளிகளுக்கு உயர்ரக மீன் குழம்பு சாப்பாடு: தளவாய் சுந்தரம் வழங்கினார்

நாகர்கோவில், ஆக.7–

கொரோனாவால் பாதிக்கப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை மற்றும் தக்கலை அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் 650 நோயாளிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க மூலிகை கலந்த உயர்ரக மீன் குழம்பு சாப்பாட்டை, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ந.தளவாய் சுந்தரம் வழங்கினார்.

நோயாளிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கு ஆரோக்கியமான உணவுகள் வழங்கிடும் வகையில், மஞ்சள், இஞ்சி, பூண்டு, மிளகு, மல்லி, சீரகம், வெந்தயம் உள்ளிட்ட பொருட்களோடு, மூலிகைகளும் சேர்க்கப்பட்டு, உயர்ரக மீன் குழம்பு வழங்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் செந்தில்குமாரின் மேற்பார்வையில், ஹோட்டல் உரிமையாளர் சங்கத்தலைவர் ஷாஜகான், சங்க நிர்வாகிகள் ஆனந்தன், ரமேஷ், தாழக்குடி நீலகண்டன் மற்றும் சமையல் வல்லுநர்கள் ஆகியோர் கன்னியாகுமரி பேரூர் கழக செயலாளர் வின்ஸ்டனுடன் இணைந்து, சின்னமுட்டம் மீன்பிடித்துறைமுகத்திலிருந்து, உயர்ரக மீன்கள் கொண்டுவந்து, மூலிகைகள் மற்றும் நோய் எதிர்ப்பு பொருட்கள் சேர்த்து, உயர்ரக மூலிகை மீன் குழம்பு தங்கவேல் திருமண மண்டபத்தில் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

இந்நிகழ்வில், மாவட்ட ஆவின் பெருந்தலைவர் எஸ்.ஏ.அசோகன், கூட்டுறவு ஒன்றியப் பெருந்தலைவர் எஸ்.கிருஷ்ணகுமார், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணைய உறுப்பினர் அ.ராஜன், மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர்கள் மு.குமாரப்பாண்டியன், சங்கரன் நாராயணன், அறங்காவலர் குழு உறுப்பினர் எம்.ஜெயசந்திரன் என்ற சந்துரு மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

# ஆக.10–ம் தேதி கடையடைப்பு ஒத்திவைப்பு: வணிகர் சங்கத் தலைவர் விக்கிரமராஜா பேட்டி

சென்னை, ஆக.7–

கோயம்பேடு மார்க்கெட்டை திறக்க ஏற்பாடு செய்வதாக அரசு உறுதியளித்ததால் தமிழகத்தில் வரும் 10–ந்தேதி நடக்க இருந்த கடையடைப்பு போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத்தலைவர் விக்கிரமராஜா தெரிவித்துள்ளார்.

சென்னை கோயம்பேடு மார்க்கெட் பகுதியில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்புத் தலைவர் விக்கிரமராஜா செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது பேசிய அவர் கூறியதாவது:–

“கோயம்பேடு காய்கறி, பழச் சந்தையைத் திறக்க வலியுறுத்தி வரும் 10–ம் தேதி அறிவித்திருந்த முழு கடையடைப்புப் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகிறது. போராட்டம் அறிவித்த தேதியின்போது முதல்வர், துணை முதல்வர் ஆகியோர் வெளியூர் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதால் அவர்களுடன் உடனடி ஆலோசனையில் ஈடுபட இயலாது என்பதாலும், 12–ம் தேதி கிருஷ்ண ஜெயந்தி காரணமாக அரசு விடுமுறை என்பதாலும் 10–ம் தேதி போராட்டம் அறிவித்தால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதைப் பேரமைப்பு எடுத்துரைத்ததன் பேரில் கோயம்பேடு காய்கறி, பழம் மற்றும் பூ சங்க வியாபாரிகள் இம்முடிவினை எடுத்துள்ளனர்.


கோயம்பேடு சந்தையை முழு பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் திறப்பது வியாபாரிகளுக்கு அவசியமான ஒன்று. திருமழிசையில் அமைத்த தற்காலிக சந்தை மழைக்காலத்தில் தாக்குப்பிடிக்க வாய்ப்பில்லை. மேலும், வியாபாரிகள் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் அரிசிக்குக் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அரசு அவர்கள் நலனைக் கருத்தில் கொண்டு விரைவாக நல்ல முடிவினை அறிவிக்கவேண்டும். கோயம்பேடு மொத்த காய்கறிச் சந்தைக்கு வார விடுப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே எங்களது கோரிக்கையாகும்”. இவ்வாறு விக்கிரமராஜா தெரிவித்தார்.


# இறைவனடி சேர்ந்தார்

**ஸ்ரீவெங்கடேஸ்வரா பக்த சமாஜம், பெரம்பூர், சென்னை - 11**

**நிறுவனர் மற்றும் செயலாளர்**



# R.M.சேஷன்

(வயது 83) அவர்கள்

**06.08.2020 வியாழக்கிழமை அதிகாலை 2.20 மணியளவில் இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**ஸ்ரீவெங்கடேஸ்வரா பக்த சமாஜம் குழுவினர்கள்**
**பெரம்பூர், சென்னை - 11**



**MATRIMONY.COM LIMITED**
Regd.Off: No.94, TVH Beliciaa Towers,
Tower II, 10th Floor, MRC Nagar, Chennai - 600028.
Website: www.matrimony.com
CIN: L63090TN2001PLC047432

matrimony.com
bharat matrimony

( Rs. in lakhs except per share data)

**EXTRACT OF STATEMENT OF UNAUDITED CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED JUNE 30, 2020**

| Sl. No. | Particulars | Quarter ended | | Year ended |
|---|---|---|---|---|
| | | Unaudited | Unaudited | Audited |
| | | June 30, 2020 | June 30, 2019 | March 31, 2020 |
| 1. | Total Income from Operations | 9,186.78 | 9,990.65 | 38,969.46 |
| 2. | Net Profit for the period (before Tax, and Exceptional items) | 1,226.09 | 1,321.41 | 3,907.65 |
| 3. | Net Profit for the period before tax (after Exceptional items) | 1,226.09 | 1,321.41 | 3,907.65 |
| 4. | Net Profit for the period after tax (after Exceptional items) | 936.56 | 932.44 | 2,953.48 |
| 5. | Total Comprehensive Income for the period | 915.57 | 910.43 | 2,866.59 |
| 6. | Equity Share Capital | 1,138.51 | 1,136.72 | 1,138.31 |
| 7. | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year | - | | 21,685.81 |
| 8. | Earnings Per Share (of Rs.5/-each) (not annualized) - | | | |
| | 1. Basic: | 4.11 | 4.10 | 12.99 |
| | 2. Diluted: | 4.10 | 4.08 | 12.95 |

**NOTE:**
1. The extract of standalone financial results is as under:


| Particulars | Quarter ended | | Year ended |
|---|---|---|---|
| | Unaudited | Unaudited | Audited |
| | June 30, 2020 | June 30, 2019 | March 31, 2020 |
| Total Income from operations | 9,068.49 | 9,885.46 | 38,683.69 |
| Net Profit before tax after exceptional items | 1,179.58 | 1,256.27 | 3,824.34 |
| Net Profit after tax and exceptional items | 890.25 | 863.65 | 2,867.76 |

2. The above is an extract of the detailed format of Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015 (as amended). The full format of the Financial Results are available on the websites of the Stock Exchange(s) and the Company's website at www.matrimony.com and the Stock Exchange(s) websites at www.nseindia.com and www.bseindia.com.

3. The above results were reviewed and recommended by the Audit Committee and approved by the Board of Directors at their meeting held on 6th August 2020 at Chennai.

For and on behalf of the Board of Directors of
**Matrimony.com Limited**,
Murugavel J
Chairman & Managing Director

**Place :** Chennai
**Date :** 6th August 2020

# காட்டுமன்னார்கோயில் திட்டப் பணிகள்: கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி ஆய்வு

கடலூர், ஆக. 7–

காட்டுமன்னார்கோயில் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகளை மாவட்ட கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி ஆய்வு செய்தார் கடலூர் மாவட்டம், மழவராயநல்லூர் கிராமத்தில் ஊரக வளர்ச்சி துறையின் மூலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.15.47 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வகுப்பறைகள் கட்டும் பணியினையும் வீராணந்தபுரம் கிராமத்தில் ஊரக வளர்ச்சி துறையின் மூலம் ரூ. 6.96 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 118 மீட்டர் நீளம் சுற்றுசுவர் அமைக்கும் பணியினையும் நங்குடி கிராமத்தில் நங்குடி குப்பம் சாலை புதியதாக ரூ. 17.69 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலையின் தரம் குறித்தும் கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி ஆய்வு செய்தார்.

கடலூர் மாவட்டம் சோழத்தரத்தில் அமைந்துள்ள நல்லான் ஏரியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூபாய் 20 லட்சம் மதிப்பீட்டில் ஏரி சீரமைப்பு பணி கரைகளை பலப்படுத்தி மதகுகள் சரிசெய்யும் பணிகளும் நீர்வரத்து கால்வாய்கள் தூர்வாரி புனரமைக்கும் பணி நடைபெற்று வருவதை கலெக்டர் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து ரெட்டியூரில் 04.08.2020 முதல் புதிதாக அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை பார்வையிட்டார். இந்நிலையத்தில் இதுவரை சன்னரகம் நெல் 58 மூட்டைகளும், பொது ரக நெல் 683 மூட்டைகளும் மொத்தம் 741 மூட்டைகள் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து நெல் கொள்முதல் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. இங்கு விவசாயிகளின் நெல் மூட்டைகளை நேரடியாக கொள்முதல் செய்வதால் விவசாயிகளுக்கு தரமான விலை கிடைப்பதாகவும், விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

வீராணம் ஏரிக்கு தண்ணீர் வரும் சோழதரம் பகுதியில் நெடுஞ்சாலையின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள பாலத்தினையும், பார்வையிட்டு ஏரியில் தண்ணீர் முழுகொள்ளவை எட்டும் போது பாலத்தின் வழியாக விவசாய நிலங்களுக்கு அதிகமாக சென்று சேதங்களை ஏற்படுத்தாத வண்ணம் இப்பாலப்பணிகள் நடைபெற அலுவலர்களுக்கு கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி ஆலேசனை வழங்கினார்.

வீராணம் ஏரியில் இருந்து நீர் வெளியேற்றும் பகுதியினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். விவசாயத்திற்கு ஏற்ப விவசாயிகளுக்கு தங்கு தடையின்றி நீர் கிடைக்க அலுவலர்கள் கவனம் செலுத்த வேண்டும். பாசனத்திற்கு நீர் திரப்பது குறித்தும் அலுவலர்களுடன் ஆலோசனை செய்த கலெக்டர், விவசாயிகள் தண்ணீரினை சிக்கனமாக பயன்படுத்தி விவசாயம் செய்து அதிக இலாபம் ஈட்ட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வின் போது செயற்பொறியாளர் செல்வகுமாரன், செயற் பொறியார் சாம்ராஜ், காட்டுமன்னார்கோயில் வட்டாட்சியர் தமிழ்ச் செல்வன், நெல்கொள்முதல் அலுவலர் ஆனந்தபாபு ஆகியோர் உடன் இருந்தனர்.


# ஈசாப் இந்தியா லிமிடெட்

ESAB®

CIN:L29299TN1987PLC058738
பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.
தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

**ஜூன் 30, 2020 உடன் முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் அறிக்கை**

ரூ. லட்சத்தில் (EPS தவிர)

| வ.எண் | விவரங்கள் | முடிவடைந்த காலாண்டு | முடிவடைந்த காலாண்டு | முடிவடைந்த காலாண்டு | முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | ஜூன் 30, 2020 | மார்ச் 31, 2020 | ஜூன் 2019 | மார்ச் 31, 2020 |
| | | (தணிக்கை செய்யப்படாதது) | (தணிக்கை செய்யப்பட்டது) | (தணிக்கை செய்யப்படாதது) | (தணிக்கை செய்யப்பட்டது) |
| 1 | மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம் | 12,730 | 17,878 | 18,472 | 71,147 |
| 2 | இக்காலத்திற்கான நிகர லாபம் (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்) | 956 | 2,560 | 2,561 | 9,724 |
| 3 | இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 956 | 2,560 | 2,561 | 9,724 |
| 4 | இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 717 | 1,807 | 1,673 | 7,141 |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)] | 710 | 1,813 | 1,664 | 7,116 |
| 6 | சமபங்கு மூலதனம் | 1,539 | 1,539 | 1,539 | 1,539 |
| 7 | பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | |
| | அ) அடிப்படை | 4.66 | 11.74 | 10.87 | 46.40 |
| | ஆ) குறைமதிப்பு | 4.66 | 11.74 | 10.87 | 46.40 |

**குறிப்பு**
1. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015–ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33ஆவது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஜூன் 30, 2020 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். இந்த நிதிநிலை முடிவுகளின் முழு வடிவமும் கம்பெனியின் **www.esabindia.com** என்ற இணையதளத்திலும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் BSE Limited மற்றும் என்ற NSE India Limited என்ற இணையதளங்களிலும் காணலாம்.
2. வரி விதிப்பு சட்டம் (திருத்தம்) அவசர சட்டம் 2019 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வருமான வரி சட்டம், 1961, பிரிவு 115AA–ன் கீழ் அனுமதிக்கப்பட்ட விருப்ப தேர்வை கம்பெனி பயன்படுத்தியுள்ளது. அதன் விளைவாக மார்ச் 31 2019 அன்று உள்ளபடி ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்து (நிகரம்) மற்றும் மார்ச் 31, 2020 அன்று முடிவடையும் ஆண்டுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட வரிச்செலவுகள் ஆகியவை மறு அளவீடு செய்யப்பட்டு உள்ளது.

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக
**ரோஹித் கம்பீர்**
நிர்வாக இயக்குனர்

சென்னை
ஆகஸ்ட் 6, 2020

“We Shape the Future”
Visit our website : http://www.esabindia.com



MANALI PETROCHEMICALS

**Manali Petrochemicals Limited**
Registered Office: “SPIC House”,
No. 88, Mount Road, Guindy, Chennai - 600 032.

CIN: L24294TN1986PLC013087
Website: www.manalipetro.com
Telefax: 044 - 2235 1098
E-mail: companysecretary@manalipetro.com

**EXTRACT FROM THE STATEMENT OF FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30.06.2020**

[₹ in Lakh]

| Particulars | Consolidated | | | |
|---|---|---|---|---|
| | Quarter ended | | | Year ended |
| | 30.06.2020 | 31.03.2020 | 30.06.2019 | 31.03.2020 |
| | Unaudited | Audited Note (3) | Unaudited | Audited |
| Total Income from operations (Gross) | 8,772.17 | 23,678.38 | 20,602.47 | 80,305.31 |
| Net Profit for the period (before Tax, Exceptional and Extraordinary Items) | 393.95 | 1,259.47 | 1,958.67 | 6,131.88 |
| Net Profit for the period before Tax (after Exceptional and Extraordinary Items) | 393.95 | 548.68 | 1,958.67 | 5,421.10 |
| Net Profit for the period after Tax (after Exceptional and Extraordinary Items) | 309.39 | 1,414.15 | 1,359.51 | 4,665.73 |
| Total Comprehensive Income for the period [Comprising Profit for the period (after Tax) and Other Comprehensive Income (after Tax)] | 249.33 | 2,112.55 | 1,040.06 | 5,006.21 |
| Reserves excluding Revaluation Reserves as per Balance Sheet of previous accounting Year | - | - | - | 39,520.76 |
| Earnings Per Share (EPS) of ₹ 5/- each (Basic and Diluted) | 0.18 | 0.82 | 0.79 | 2.71 |

**Note:** 1. The above is an extract of the detailed format of quarterly results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Financial Results is available in the website of the Company www.manalipetro.com and the websites of the Stock Exchanges, viz., www.bseindia.com and www.nseindia.com

2. Additional information on Unaudited Standalone Financial Results pursuant to proviso to Reg. 47 (1) (b):

| Particulars | Quarter ended | | | Year ended |
|---|---|---|---|---|
| | 30.06.2020 | 31.03.2020 | 30.06.2019 | 31.03.2020 |
| | Unaudited | Audited Note (3) | Unaudited | Audited |
| Total Income from operations | 6,843.21 | 18,251.12 | 18,071.79 | 67,663.95 |
| Profit Before Tax | (117.78) | 343.16 | 1,715.19 | 4,497.43 |
| Profit After Tax | (111.96) | 1,155.31 | 1,128.00 | 3,864.03 |
| Total Comprehensive Income After Tax | (114.73) | 1,160.84 | 1,145.62 | 3,911.31 |

3. The figures of quarter ended 31st March are the balancing figures between audited annual figures in respect of the full financial year and the published year-to-date figures up to the third quarter of the financial year.

**By order of the Board**
**For Manali Petrochemicals Limited**

Place : Chennai
Date : August 05, 2020

**Karthikeyan Muthukrishnan**
***Whole Time Director (Operations)***